பதை அரசு பரிசீலனை செய்து பார்த்து அடுத்து வருகிற நேரத்திலே தமிழ் நாட்டிலே எண்ணெய் வித்துக்களைப் பாதுகாக்பதற்கான முன் முயற்சிகளை எடுக்க முடியாதா ?

அது சம்பந்தமாக அரசு மீண்டும் மறு பரிசீலனை செய்து நிலக்கடலைக்குப் பாதுகாப்புக் கொடுக்க முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, எண்ணெய் வித்துக்களை அதிகமாக மேம்படுத்த வேண்டுமென்றுதான் அதற்காக இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கும், யோசனை நிதி ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள யோசனையாகும். அடுத்து வரும் ஆண்டுகளில்தான் அதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

திரு. இரா. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, நிலக்கடலைச் செடிகளில் விழும் கம்பளிப் புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் அளிக்கப்படும் அந்த மருந்தின் வீரியம் குறைவாக இருப்பதால் புழுக்கள் செடிகளிலே உண்டாகி, அதிலேயே வளர்ந்து அதன் மூலமாக முட்டையிட்டு மண்ணுக்குள்ளாக ஓராண்டு இருந்துவிட்டு, பிறகு கடலைச் செடியைப் போட்டவுடனே மண்ணிலேயிருக்கும் முட்டை வெடித்து பெரிதாக அந்தச் செடிகளுக்குப் பாதகமான நிலை உருவாகி விடுகிறது. ஆகவே, மண்ணுக்குள்ளே இருக்கும் அந்த மூல வித்தை எடுக்கின்ற திட்டத்தை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப் பட்டு வருகிறது.

கிண்டி—மேடவாக்கம் நெடுஞ்சாலை.

*வினா எண் 461—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கிண்டியிலிருந்து வேளச்சேரி வழியாக மேடவாக்கம் செல்லும் நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் உடனே பழுது பார்க்க அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இது குறித்து சென்னை மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

1981 மார்ச் 24]

திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிண்டியிலேயிருந்து மேடவாக்கம் வரையில் பல்வேறு தொழிற்கூடங்கள் இருக்கின்றன. அந்தப் பாதையில் அதிகமான போக்குவரத்து இருக்கிறது. அந்தப் பாதையை அகலப்படுத்தாத காரணத்தால் போக்குவரத்தில் அடிக்கடி தடங்கல் ஏற்படுகிறது. அதனால் ஆக்சிடென்ட் ஏற்பட்டு விட்டால் நீண்ட நேரம் போக்குவரத்திற்கே இடைஞ்சல் ஏற்பட்டு வருகிறது. அதை அகலப்படுத்த முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். அதோடு, மேடவாக்கத்திலிருந்து ஒட்டியம்பாக்கம் வரை உள்ள ரோட்டைச் சீர்படுத்த முன் வருமா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, குறுகலான சாலைகளையெல்லாம் விரிவுபடுத்துவதற்காகவும், இருபுறத்திலும் விரிவுபடுத்தி நடைபாதைகளை அமைப்பதற்காகவும் ஏறத்தாழ 1,78,500 ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது; வேலைகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

மணிமுத்தா நதியில் தரைப்பாலம்.

*வினா எண் 462—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதியில் எறுமனூருக்கு அருகில் மணிமுத்தா நதியில் தரைப்பாலம் அமைத்து போக்குவரத்து வசதியற்ற அப்பகுதியில் உள்ள பத்து கிராமங்களை விருத்தாசலத்துடன் தொடர்பு கொள்ள உதவ வேண்டுமென்று மக்களிடமிருந்து விண்ணப்பம் அரசுக்கு அனுப்பப்பட்டதா?

(ஆ) ஆம் என்றால் தரைப்பாலம் அமைத்து கொடுக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தனியாருக்குச் சொந்தமான சந்தைகளை அரசுடைமையாக்குதல்.

*வினா எண் 463—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சி மற்றும் பேருராட்சி எல்லைக்குள் இருக்கும் தனியார்க்குச் சொந்தமான சந்தைகளை அரசுடைமையாக்கி